## இது ஆசியுரை அல்ல . அனுபவக் கட்டுரை

இலங்கை வங்கி மேற்றரக்கிளையின் 75ம் ஆண்டுவிழா சிறப்பு மலருக்குரிய சேவைகள் பற்றிய ஆசியுரை வழங்க எவ்வளவு தூரம் நான் பொருத்தமானவன் என்பது எனக்கு தெரியாது. ஆனால் என்னுடைய வங்கி வாழ்க்கையின் சில சம்பவங்களை குறிப்பிடுவதன் மூலம் மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக கடமையாற்றியமை பற்றிய நினைவுகளையும் பகிர்ந்து கொள்வதில் தவறில்லை என நினைக்கின்றேன்.


1939இல் இலங்கை வங்கி எனும் அன்னைக்கு யாழ் மண்ணில் பிறந்த இக்குழந்தைக்கு 75 வயதாகியும் முதுமை பெறாது தனது பூட்டப்பிள்ளையை விட சுறுசுறுப்பாகவும் நவீன யுக்திகளுடனும் பணியாற்றும் இக்கிளை 100வது ஆண்டு மலரையும் வெளியிட்டு சாதனை புரிய வேண்டும் என இத்தால் வேண்டிக் கொள்கின்றேன். ஏனெனில் ஆவணங்கள் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த மேற்றரக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக திருமதி.கமலராணி துரைராஜா இருந்தபோது திரு.C. நாகரட்ணம் அவர்கள் பிரதம லிகிதராக(Chief Clark ) இருந்து ஏனைய ஊழியர்களுடைய அயராத உழைப்புடன் (பொன்விழா) 50ம் ஆண்டு மலர் வெளியிடப்பட்டமையே எனது சிந்தனையையும் தூண்டி விட்டன. இவ்வழியை பின்பற்றியே நான் ஸ்ரான்லி வீதிக்கிளையின் முகாமையாளராக இருந்த போது வெள்ளி விழா மலரை 11.11.2002 இல் (25ம் ஆண்டு நினைவு ஆண்டு – Silver Jubilee) வெளியிட்டேன்.


இதே பாணியில் திரு.K.P ஆனந்த நடேசன் அவர்கள் பருத்தித்துறை கிளையில் முகாமையாளராக இருந்தபோது அக்கிளையின் 50வது ஆண்டு நினைவு மலரை (பொன்விழா- Golden Jubilee) வெளியிட்டார்.

இப்போது எனது கௌரவத்திற்குரிய திரு.சிவஞானசுந்தரம் அவர்கள் இப்பாதையிலே 75ம் ஆண்டு சிறப்பு மலரை வெளியிட முன் வந்தமைக்காக அவருக்கும் , அவருக்கு உறுதுணையாய் இருப்பவரகளுக்கும் நான் இங்கு பாராட்டுக்களையும் எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**என்னைப் பற்றி எனது மணிவிழா மலரில் எனது அன்பிற்குரிய ஊழியர்கள் வழங்கிய செய்திகளில் சிலவற்றை கீழே தர விரும்புகின்றேன்.**



Mr.K.Kanesamoorthy



Mr.K.Sivagananathan

வங்கியில் எனது மூத்த குருவாக திகழ்ந்தவர் வங்கியியற் பேரறிவாளன் அமரர் K.சிவகணநாதன். இவர் ஒரு காசாளராக சேர்ந்து, London branch - country manager ஆக இருந்து Advisor to the Central Bank Governor ஆக செயற்பட்டவர். இலங்கை வங்கியில் பல புரட்சிகள் புரிந்தவர். வங்கித்துறையில் பட்டங்களைப் பெறவும் நடைமுறை வங்கி நடவடிக்கைகளின் சூட்சுமங்களின்

அறிவினைப் பெறவும் எனக்கு இவர் ஊக்கியாக இருந்தது போல மூத்த வங்கியாளர் திரு.K.கணேசமூர்த்தி ஐயா அவர்களே பின்வரும் அமைப்புக்களை உருவாக்க கருப்பொருளாக இருந்தவர்.

1. வங்கியாளர் சங்கம் யாழ்மாவட்டம் (Bankers association Jaffna District)-இது அனைத்து வங்கிகளின் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து போர்க்கால சூழ்நிலையில் பல கூட்டுமுடிவுகளை எடுக்கவும்- இராணுவத்தினரது கெடுபிடிகளை சமாளிக்கவும் பெரும் உதவியாக இருந்தது. இதன் ஒருங்கிணைப்பாளராக நான் செயற்பட்டேன்.
2. யாழ்மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு , நலன்புரிச் சங்கம்- ( Sports welfare and Art Literary association BOC - Jaffna District ) இவ்வமைப்பபில் குடாநாட்டில் வேலை செய்யும் அனைத்து இலங்கை வங்கி ஊழியர்களும் அங்கத்துவம் பெற வழிசெய்யப்பட்டது. பல்வேறு கிளைகளிலிருந்து ஓய்வு பெறுவோர் அனைவரையும் ஒன்றுகூட்டி கௌரவித்து, ஞாபகார்த்தமாக அவரவர் பெயர் பொறிக்கப்பட்ட குத்துவிளக்கு, மலர்மாலைகள், பொன்னாடைகள் போன்றவற்றால் சகல அங்கத்தவர்களாலும் கௌரவிக்கப்பட்டு வழியனுப்பி வைக்கப்படுவர்.
3. “ஊக்கி ” (The Catalyst) என்ற காலாண்டு சஞ்சிகையை பிரதம ஆசிரியராக இருந்து வெளியிட்டு, வங்கியியல் சம்மந்தமான பல கட்டுரைகளையும் வங்கியின் போட்டிப் பரீட்சைக்களுக்குரிய வினாவிடைகளையும் பிற கல்விமான்களது கட்டுரைகளையும் இது உள்ளடக்கியதாக வெளியிட்டேன்.

   இவற்றிற்கெல்லாம் எனக்கு உறுதுணையாக இருந்தவர்களுள் முதன்மையானவரான **அமரர் பொன் பாலகுமார்** அவர்கள் இங்கு கௌரவத்துடன் நினைவு கூரப்பட வேண்டிய ஒருவராவார்.

4. **இலங்கை வங்கி ஊழியர்களுக்காகவும் ஏனைய வங்கியாளருக்குமான சில சேவைகள்:**

அ. தனிப்பட்ட முறையில் , சர்வகலாசாலைப் பேராசிரியர்களுடன் என்னால் “ வட்டு Jaffna college under graduate Dept. “இல் நடாத்தப்பட்ட வங்கிப் பரீட்சைக்கான நிலையம்” பின்னர் வங்கியாளர் சங்கத்தின் முயற்சியினாலும், எனது குரு.K.சிவகணநாதன் அவர்களின் ஊக்குவிப்பாலும் 2002 ம் ஆண்டு London chartered institute of bankers என்பதன் வடமாகாணக்கிளை (Affiliated Branch for Northern Province) மேற்படி நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதில் முக்கிய பங்காற்றியவர்களாக எமது BOC யின் திரு. K.உலகநாதன், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (Regional Manager) திரு. T.ரகு அதன் AGM ஆக இருந்த திரு.K ஆனந்தராஜா மற்றும் Jaffna college ஐ சேர்ந்த விரிவுரையாளர் திரு.அ.குமாரவேல் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

எனது அனுமானப்படி ஆயிரத்திற்கு மேற்பட்ட வங்கியாளர் வங்கியியல் பரீட்சைகளில் சித்தியெய்தி இருப்பர்.

ஆ. **1995ம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் நல்கிய சேவைகள்**
என மணிவிழா மலரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு.

இக்காலகட்டத்தில் வலிகாமத்தில் இடம்பெற்ற பாரிய ஒட்டுமொத்த இடப்பெயர்வினால் இங்கிருந்த சகல வங்கிக் கிளைகளும் சாவகச்சேரிக்கும், வடமராட்சிக்கும் மிகச் சொற்ப ஆவணங்களுடன் தற்காலிகமாக நகர்த்தப்பட்டன.
இவ்வேளையில் இவர் (ந.சிவரட்ணம்)யாழ். மேற்தரக்கிளையில் உதவி முகாமையாளர் தரத்தில் கடமையாற்றினார். இக்கிளை திருமதி.K துரைராஜா அவர்களின் முகாமைத்துவத்தில் இருந்தது. திரு.ந.சிவரட்ணம் மற்றும் தற்போதைய அச்சுவேலிக் கிளை முகாமையாளர் திரு.T.புவனேந்திரன் ஆகியோர் வடமராட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையினால் தங்கள் கடுமையான தியாகங்கள்

மூலமாக இக்கிளையை (Jaffna super grade)பருத்தித்துறையிலும் ஏனைய எமது வங்கிக் கிளைகளை சாவகச்சேரியிலும் நடாத்த உதவினர். இக்காலகட்டத்தில் இலங்கை வங்கியானது ஏனைய வங்கிகளை விட முன்னோடி வங்கியாக திகழவைத்ததுடன் அளப்பரிய சேவைகளை செய்து எமது வங்கியின் " தேசத்தின் வங்கியாளர்" என்ற பெயரையும் நிலை நிறுத்தினார்.
குண்டுசி தொடக்கம் மின்பிறப்பாக்கி வரை உபகரணங்களை ஒழுங்கு செய்ததுடன் சக ஊழியர்களுக்கான இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்ததை நினைத்து அவர் திருப்திப்படுவதை நண்பர்களாகிய நாம் அறிவோம். ஆனாலம் இடப்பெயர்வின் போது திரவப்பணம் உட்பட வங்கியின் ஆவணங்களைக் காப்பாற்றிய ஊழியர்களுக்கு தான் எவ்வளவு முயன்றாலும் , அப்போதைய உதவிப்பொது முகாமையாளர் உட்பட உயர் முகாமைத்துவம் எந்தவித பாராட்டுக் கடிதங்களையோ (Appreciation letter) உயர்பதவிக்கான விசேட புள்ளிகளையோ (Merit marks) இதுவரை வழங்கவில்லை என்ற மனநெருடலுடன் இருப்பதாகக் கூறினார். இவ்விடயத்தில் அக்கால சேவையின் போது உயிர் துறந்த திரு.அல்பிறட் போன்ற உத்தியோகத்தர்களையும் அந்தளவு கடுமையாக உழைத்த ஏனைய ஊழியர்களினது சேவைகளையும் நினைவு கூருகின்றார்.
குறிப்பு :- இக்காலத்தில் திரவப்பணம் மிகவும் தட்டுப்பாடாக இருந்தது. எனவே பணத்திற்கு பதிலாக வங்கி ஆணைகளே (Pay orders ) வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு வந்தது.



இவ் இக்கட்டான காலகட்டத்தில் வடமாகாணத்திற்கு திரு.அபே என்பவரே முதன்மைப் பாதுகாப்பு அதிகாரியாக (D.C.S.O) இருந்தார் .இவரது முயற்சியால் எமது தலைமையகத்திலிருந்து ரொக்கப்பணத்தை பருத்தித்துறை துறைமுகத்திற்கு கப்பல் ஊடாக கொண்டுவர ஆவன செய்தார். அப்பொழுது Chief Manager ஆக இருந்த திருமதி.K.துரைராஜா அவர்கள் மிகத்துணிவுடனும் தியாக சிந்தனையுடனும் தறைமுகத்திலுள்ள கப்பலுக்குச் சென்று, நூலேணியில் (Rope Ladder) கப்பலின் தளத்திற்கு போய் பணத்தை பொறுப்பேற்று வந்தமையை இந்த இடத்தில் நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

Mr.W.D.L.B .Abeywardane

2004ம் ஆண்டில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று பதுளை ஊவா மாகாண அலுவலகத்தில் கணக்காய்வு பகுதித் தலைவராகவும், (Team leader -audit dept. பின் வன்னிப் பிரதேச மாவட்ட முகாமையாளராகவும் (Area manager – wanni) கடமை புரிந்து 2005ம் ஆண்டின் இறுதியில் யாழ் மேற்தரக் கிளையின் (Jaffna Super Grade Branch ) சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமை புரிந்தார்.

**5.B.O.C வடபிராந்தியத்துடன் தொடர்புடைய வேறு சில வரலாற்றுப் பதிவுகள் வரலாறு:**

அ. மேலே குறிப்பிடப்பட்ட D.C.S.O அபே என்பவர் தென்னிலங்கையைச் சேர்ந்த BOC நண்பன். இவர் Mr.W.D.L.B.Abeywardane ஆவார். இவருடைய சேவையைப் பற்றி இங்கு நான் நிச்சயமாக குறிப்பிட்டேயாக வேண்டும். இதற்கு முந்திய பந்திகளில் ஒரு சில வார்த்தைகள் கூறிய போதும் மேலதிகமாக சில விடயங்களை கூறவிளைகின்றேன்.

இம் மாகாணத்திற்கு (NP) இவர் சேவையாற்ற வந்த காலம் 1993ஆம் ஆண்டு. ஆனால் இவருடைய சேவை முக்கியமாக 1995ம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தையும் தாண்டி நீண்டகாலம் தொடர்ந்தது.

இடப்பெயர்வு காலத்திலும் சரி அதற்கு பின்னரும் சரி இவரது சேவை வடமாகாண இலங்கை வங்கி ஊழியர்களுக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒன்றாகும்.

இடப்பெயர்வு காலத்தில் யாழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வலிகாமம் மற்றும் வடமராட்சி போன்ற பிறபகுதிகளுக்கு இடம்பெயர்ந்த போது காரைநகர் கிளைதிறக்கப்பட்டு தென்னிலங்கை நண்பர்கள் வந்து அங்கு சேவையாற்றினார்கள். இக்கிளை முப்படைகளுக்குமான ஊதியங்கள், மேலதிக கொடுப்பனவுகள் போன்றவற்றை முக்கியமாக செய்த போதும், காரைநகரில் இடம்பெயராது வாழ்ந்த முதியோர்களுக்கும், குடும்பங்களுக்கும் தனது சேவையை ஆற்றியிருந்தார்.

Cash transport - இக்காலப்பகுதிகளிலும் இதற்குப் பின்னரும், மூன்று நான்கு ஆண்டுகளாக கொழும்பிலுள்ள எமது தலைமையகத்திலிருந்து திரவப்பணம் (Liquidity cash) ஒவ்வொரு தடவையும் பல இலட்சங்கள் ரூபா செலவில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஹெலிகொப்பர் மூலமாகவே பலாலி ஊடாக எமக்கு வந்து சேர்ந்தன. இச்செலவுகள் யாவும் (மில்லியன் கணக்கில்) கிளைகளிடையே பகிர்ந்து பொறுப்பேற்கப்பட்டது. ஆனால் இவரது முயற்சியாலும் தலையீட்டாலும் இராணுவத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களது இராணுவ விமானங்கள் மற்றும் இராணுவ ஹெலிகொப்பர்கள் மூலம் கொழும்பிலிருந்து எவ்வித செலவுமின்றி முழுக்க முழுக்க இலவசமாக இவரால்தான் பணம் கொண்டுவரப்பட்டது. இதே பாணியில்தான் அந்த இக்கட்டான காலத்தில் இவருடைய உதவியுடன் ICRC flag உடன் கப்பல்களில் பணம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டது. இக்காலப்பகுதிகளில் திரு.M.சண்முகசுந்தரம் மற்றும் K.கணேசமூர்த்தி ஆகியோர் மாவட்ட முகாமையாளர்களாக பணியாற்றினார்கள். ஒருதடவை இப்போது இளைப்பாறியுள்ள திரு.K.பாலசுப்ரமணியம் (AGM) அவர்கள் இவ்வாறு நூலேணியில்(Rope ladder) ஏறும்பொழுது தவறி கடலினுள் விழுந்ததையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

திரு.அபே அவர்கள் உத்தியோகபூர்வமாக கொழும்பிற்கு சென்று வரும்பொழுதெல்லாம் ஊழியர்களுக்குத் தேவையான மருந்து , பெட்ரோல் போன்றவற்றையெல்லாம் கொணர்ந்து வழங்குவார். அதுமட்டுமல்ல இயல்புநிலை வரும்வரையில் குறிப்பபாக மேற்றரக்கிளை ஊழியர்களுக்கான சமைத்த உணவுகளையும் உலர் உணவுகளையும் இராணுவத்தினரின் முகாம்களிலிருந்து பெற்று வழங்கி வந்தார். இவரது சேவை வடமாகாணத்தில் 1993 – 2000ம் ஆண்டு வரை நீடித்தது. இவரது சேவையைப் பராட்டி இலங்கை வங்கி தலைமையகம் Chief security office of Entire Bank of Ceylon என்ற பதவி உயர்வைக் கொடுத்து கௌரவப்படுத்தியது.

ஆ. "out sourced staff" எனும் வெளிக்கள ஊழியர்கள்

out sourced staff எனும் வெளிக்கள ஊழியர்களை எமது ஆளணியில் சேர்ப்பதற்காக நான் இரண்டாம் கிளையின் முகாமையாளராகவும் திரு.K. பாலசுப்ரமணியம் அவர்கள் AGM ஆகவும் திரு.B.A அருமைநாயகம் அவர்கள் OM அகவும் பணிபுரிந்த காலப்பகுதியில்(2002களில்) (யுத்தச் சூழ்நிலையால் மிக நீண்ட காலமாக வடமாகாணத்திற்குரிய ஆகக்குறைந்த ஆளணியைக் கூட எமது தலைமையகம் தரவில்லை.) அப்போது DGM (Branches and Dev. Banking ) ஆக இருந்த திரு.S.ரனசிங்க குடாநாட்டுக்கு வருகை தந்து முகாமையாளர்களின் கூட்டத்தை கூட்டி பல இலக்குகளை (Targets) அடைய வேண்டும் என இடித்துரைத்தார். அன்றாட வங்கி நடைமுறைகளையே செயற்படுத்த 50 வீதமான ஆளணி கூட இல்லாத நேரத்தில் இந்த இலக்குகளை அடையும் படி கேட்டதே நியாயமில்லை என நான் சுட்டிக்காட்டினேன். எனவே தற்காலிக ஊழியர்களை (Casual employees) நியமிக்க AGM அவர்களுக்கு அதிகாரம் வழங்கம்படி கேட்டபொழுது அது நடைமுறைச் சாத்தியம் இல்லையெனக் கூறி மாற்று வழியாக மேலே கூறப்பட்ட வெளிக்கள ஊழியர்கள் எனும் எண்ணக்கரு பற்றி கூறி அதன் மூலம் தாங்கள் கோரும் அடிப்பபடை தராதரங்கள் ( Basic qualifications) உள்ள ஏதாவது அமைப்பினூடாக இக்காரியத்தை மேற்கொள்ள அனுமதி தருவதாக ஒரு மாற்றுவழியை கூறிச்சென்றார். இதற்குப் பொருத்தமாக " **வடமராட்சி தட்டச்சு சுருக்கெழுத்தாளர் சங்கத்தினூடாக"** ஏறக்குறைய 100 ஊழியர்களை நியமித்து அவர்களின் அளப்பரிய சேவை மூலம் வடமாகாண ஆளணிப் பற்றாக்குறையை சமாளித்தோம். இவ்விடயத்தில் - மரணித்த் எமது ஊழியர்களது குடும்ப பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இவர்களுள் பலர் இன்று நிரந்தரமாக்கப்பட்டதுடன் சிலர் உத்தியோகத்தர் பதவிகளையும் வகித்து வருகின்றனர். *ஆனால் ஒரு சிலர் மிகவும் பாதிக்கப்பட்டு எந்தவித ஓய்வூதிய நன்மைகளுமின்றி மிகவும் மனக்கசப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் சிலர் இறந்தும் விட்டனர். இவர்களுக்காக என் மனதில் ஒரு நெருடல் வாழ்நாள் முழுவதும் இருந்து கொண்டே இருக்கும்.*

இ. Introduction of ICBS system to Northern Province

இந்த நவீன Online system வடமாகணத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட போது அதற்குரிய குழு (Team) கொழும்பிலிருந்து வருகை தந்து இங்குள்ள ஊழியர்களுக்கு அதுபற்றிய அறிவையும் பயிற்சியையும் அளித்து தாமாகவே Jaffna Super grade , Jaffna 2nd Branch மற்றும் Thirunelvely Branch ஆகிய கிளைகளுக்கான தமது செயற்பாடுகளை முடித்துச் சென்றனர். இது 2005/2006 இல் என நினைக்கின்றேன். இது திரு.K.பாலசுப்ரமணியம் அவர்கள் AGM ஆகவும் திரு,B.A.அருமைநாயகம் அவர்கள் செயற்பாட்டு முகாமையாளராகவும் (OM) நான் மேற்றரக் கிளைக்கு இரண்டாம் கிளையிலிருந்து மாற்றமாகி வந்த காலமும் ஆகும். எமது கூட்டு முயற்சினால், எமது வடமாகாணக் கிளைகளிலிருந்து பின்வருவோரை தெரிவு செய்து தலைமையகத்திற்கு அனுப்பி, நான்கு- ஐந்து மாத கால பயற்சிகளைப் பெற்று வருமாறு அனுப்பியிருந்தோம்.



திரு. G.சகாதேவன் (இறுதியில் OM (np) ஆக இருந்து கடமையாற்றி 2018இல் ஓய்வுபெற்றார்)



திரு .E.பிரமேராஜன் (இறுதியில் Acting Chief Manager- ஆக Jaffna Super grade கிளையில் கடமையாற்றி 2019இல் ஓய்வுபெற்றவர்)



திரு .W.விஜயகுமார் (இவ்வாக்கத்தினை எழுதும் போது கிளை முகாமையாளராக (Branch Manager) கடமை புரிந்து வருகிறார்.

மேலும்



திரு.S.தர்மராஜா (கிழக்கு மாகாணத்திலிருந்தவர் - இவர் இறுதியில் Jaffna 2nd super grade இல் Senior Manager ஆக இருந்து கடமையாற்றி 2015இல் ஓய்வுபெற்றவர்)

இவர்கள் தமது பயிற்சிகளை முடித்து வந்து தலைமையகத்திலிருந்து வந்த, திரு.சதானந்தன் அவர்களது குழுவின் நெறிகாட்டலில் தாமாகவே இங்குள்ள கிளைகள் அனைத்தையும் ICBS system த்தின் கீழ் கொண்டு வந்தனர்.
இவர்களது சேவையும், தியாகமும் எம்மவர்களால் நினைவு கூறப்படவேண்டிய ஒன்றாகும்.

**ஈ. கொழும்பில் நடாத்தப்பட வேண்டிய பதவி உயர்வுகளுக்கானதும் புதிய நியமனங்களுக்கானதுமான நேர்முகப்பரீட்சைகள் யாழ் மாவட்டத்திலேயே நடைபெற வழிவகுத்தமை.**

இவை திரு.K பாலசுப்ரமணியம் AGM ஆகவும் திரு.B.A அருமைநாயகம் அவர்கள் Om and AGM ஆகவும் இருந்த காலத்திலிருந்து எனது நிர்வாகம் வரை நடைபெற்று வந்தன. பின்வரும் தரங்களுக்கான Interviews வடமாகாணத்திலேயே முதன் முதலாக நடாத்தப்பட்டன.

1. Out Sourced Staff including **Security Guard** (Then D.C.S.O Mr. S. Sivarajah was also in the Panel)
2. New Selection for Clerical Grade (Trainee Staff Assistants)
3. Supervisor to Sub Manager
4. Sub Manager to Asst. Manager
5. Management Trainees

இதில்
ஐந்தாவதாக காணபப்படும் management Trainees Interview இங்கு நடாத்த நான் எடுத்த கடும் முயற்சிகளும் அப்போதைய (2009) G.M. Mr. B.A.C Fernando அவர்களின் பேருதவியும் மறக்கப்பட முடியாதவையே.

பல காலங்களாக போர்ச் சூழ்நிலை நிலவியே வந்தமையால் அக்கால நடைமுறைப்படி பொலிஸ் அனுமதி ,இராணுவ அனுமதி , விமானப்பயணச்சீட்டு பெறுதல், மீண்டும் கொழும்பில் இதே நடைமுறைகளை பின்பற்றுவதுடன் வேறு பல கெடுபிடிகளும் இருந்து வந்தமையால், வடமாகாண இலங்கை வங்கி தலைமையகத்திலிருந்த (AGM Office NP) உயர் அதிகாரிகளினால் மேற்குறிப்பிட்ட உயர்பதவிகளுக்கானதும், புதிய நியமனங்களுக்கானதுமான நேர்காணல் இங்கேயே நடாத்தப்பட வழியேற்படுத்தப்பட்டது. இதனால் பணச்செலவும் ஏனைய கஸ்ரங்களும் தவிர்க்கப்பட்டன. இவ் விடயமானது வடமாணத்தை பொறுத்தளவில் ஒரு பெரிய மாற்றத்திற்கும் இலங்கை வங்கியின் நடைமுறைகளை திசை திருப்புவதற்குமான குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாகும்.

மேற்காட்டப்பட்ட இரண்டு விடயங்களில் முதலாவது தேர்வுகளை நடாத்தும் போது பின்வருவோர் தேர்வுக்குழுவின் ( interview panels) அங்கத்தவர்களாக செயற்பட்டனர்
B.A அருமைநாயகம் (AGM –chairman)
N.சிவரட்ணம் (OM)
திரு. R.விஜயசிங்கம் (Jaffna Branch chief manager )

இரண்டாவது குழுவிற்கு (2009)
திரு. K. உலகநாதன் (Then Area Manager – Wanni)
N.சிவரட்ணம் (AGM- Chairman)
திரு.V. S.சிவநாதன்
திரு. R விஜயசிங்கம் (Chief Manager)

இந் நடவடிக்கைகளினால் பல சிரமங்கள் தவிர்க்கப்பட்டு, எம்மால் தெரிவு செய்யப்பட்டவர்களுள் அநேகர் கிளை முகாமையாளர் தரம்(Branch manager) , மாவட்ட முகாமையாளர்( Area Manager) செயற்பாட்டு முகாமையாளர் (OM) போன்ற தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். அத்துடன் சிலர் ஓய்வுபெற்றும் விட்டனர்.

**மனங்கொள்ள வேண்டியது** :- எனது இவ் அனுபவக் கட்டுரையில் வடமாகாண ஊழியர்கள் பட்ட கஸ்ரங்களும் தியாகங்களும் பற்றியும் கூறப்போனால் இது முடிவுறா கட்டுரையாகவே முடியும். இவ்விடயங்களைப் பற்றி வேறு சில ஓய்வு நிலை ஊழியர்களிடமிருந்தும் விடயங்களைப் பெற்று பதிவு செய்தல் நன்மை பயக்கும் எனும் நம்பிக்கையுடன் இக்கட்டுரையை நான் நிறைவு செய்கின்றேன்.

Please Refer Annexure 1 too, that gives important past history of (NP)



N.Sivartnam
Retired AGM – BOC-NP
B.A,(S.L),A.I.B, F.I.B(S.L), P.G.Dip- in Pub.Admin

Annexure 1

**Extracted** from the writeups by the joint efforts of Mr.K Ulakanathan (Retied operation manager – NP) and Mr.K.Balasubramaniam (Rtd A.G.M – NP) (in English) under the guidance of Mr.N.Sivaratnam (Rtd A.G.M -NP) and from the write-up of Mr.S.Nadarajah (in Tamil) who was the then O.I.C Kachcheri branch in 2009 ..Specially these were created in connection with the 70$^{th}$ Anniversary of BOC.
Jaffna Super Grade Branch celebrated its Golden Jubilee on 2$^{nd}$ February, 1995. This was the fist Branch in Northern Province and 5$^{th}$ Branch of Bank of Ceylon. Mr.C.Loganathan was the first Manager who became the first Ceylonese General Manager of the Bank of Ceylon. To Commemorate the occasion, a well- attended Function graced by religious dignitaries, well wishers, staff members and special invitees was held in Jaffna. The souvenir that was published to mark the occasion was unique in that it was the first time that such a souvenir had been brought out by a branch in the Northern Province. The staff and management donated medical equipment's worth Rs. 15 000/= to the Teaching Hospital, Jaffna.
05 three wheel cycles and artificial limbs to the disabled, Chests of drawers for the use of the inmates of Thirunelvely Saiva Sirar illam and Sports equipment for the use of the Kaithady Saiva Illam.

Jaffna, normally a vibrant city with a teaming population was all but deserted when the army marched in October 1995 following "Operation Riviresa 1" after routing the LTTE who had allegedly forced residents to flee from Jaffna and Valgamam Divisions across the picturesque Jaffna lagoon to the main land. The residents estimated to be around 200,000 were displaced and were compelled to take temporary shelter in Vadamaradchy and Thenmaradchy areas. That was a mass exodus of People that took place overnight from the entire Valigamam divisions and Jaffna to Vadamaradchy and Thenmaradchy.
The Bank's branches and employees were no exception to this human tragedy. There were no communication facilities to contact the head Office to get instructions. Mr.Shanmugasundram, Area Manager, Jaffna and Mrs.K.Thuraiajah, Chief Manageress ,Jaffna Super Grade Branch took a strategic decision to shift the branches to Vadamaradchy and Thenmaradchy areas. Branch Managers Ms.K.Balasubramaniam,V.Iyamperumal ,T.Thangeswaran, N.Sooriyanathan,

B.A.Arumainayagam, other senior officers and members of staff assisted them to implement the decision . Mr.N.Sivaratnam, Assistant Manager Attached to Point Pedro Branch arranged the necessary furniture for the smooth functioning of Jaffna Super Grade Branch and other Branches. He also assisted in arranging accommodation to several staff members. The only mode of communication with Head Office was through the “ Care International” Radio and that too was just once a week..

Jaffna Super Grade Branch functioned at the Point Pedro Branch premises. They had an Extension Office at Chavalachcheri. Kankesanthuri Branch functioned at Chavakachcheri Branch premises. Jaffna Second Branch and Kayts Branch were functioning at Meesalai Agrarian Services Centre premises. Chunnakam Branch, Manipay Branch and Area Office were Functioning at a Private building at Chavakachcheri. In the meantime, a third Jaffna City Branch was open in the Jaffna town and was functioning at the Hospital road bank premises. A branch of the Bank was opened at Karainagar to service the Navy personnel. There was no access to this Branch from Jaffna and therefore staff from Colombo and who came by the ship & manned the Branch.

Certified by
N.Sivartnam
Retired AGM
B.A,(S.L),A.I.B, F.I.B(S.L), P.G.Dip- in Pub.Admin
June 2020